இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

எம்.சி.ஒ.பி.எண். 93/2021 மசா.1

பெயர். திரு. வெங்கட்ராமன் த/பெ.

நாள். 11.03.2024 வயது.

2024 -ஆம் ஆண்டு மார்ச் 11-ந் தேதிAct X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி திருமதி. C. கார்த்திகா, எம்.ஏ., பி.எல்., தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**மனுதாரர் மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

விபத்து சமயத்தில் நானும் ஒரு இருசக்கர வாகனத்தில் போனேன் என்றால் சரிதான். எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஓட்டுனர் உரிமம் காணாமல் போய் விட்டது நகலும் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் கெல்மெட் போடவில்லை என்றால் சரியல்ல. கெல்மெட் போடவில்லை என்றும்போட்டிருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் வண்டிக்கு விபத்து சமயத்தில் இன்சூரன்ஸ் இருந்தது. மோட்டார் வாகன ஆய்விற்கு என் வண்டி போனபோது ஓட்டுனர் உரிமம், இன்சூரன்ஸ் ஆகியவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் நான் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் மேற்சொன்ன ஆவணங்கள் இல்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சாலையின் ஓரத்தில்தான் விபத்து நடந்தது. விபத்து இடது புறத்தில் நடந்ததா வலது புறத்தில் நடந்ததா என்று எனக்கு தெரியவில்லை. என் மீது மோதிய வண்டி வருவதை ஒரு பர்லாங் தூரத்தில் பார்த்தேன். வண்டியின் முகப்புதான் என்மீது மோதியது. நான் நேராக போய்கொண்டிருந்தபோது எதிரே வந்த வண்டி மோதிவிட்டது. நான் தவறான திசையில் போய் விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் மறுநாள்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் கொடுத்தது என் மனைவி. தவறான புகார் கொடுக்கப்பட்டுள்ளதாக என்னுடைய புகார் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் எனக்கு தெரியாது. விபத்து என்னுடைய

அஜாக்கிரதையால் தவறான திசையில் வந்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறான திசையில் போய் என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்படுத்திக்கொண்டதாலும் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு தகுதி சான்று இல்லை என்பதாலும் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வருமானம், வேலை ஆகியவற்றை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சிகிச்சை முழுவதும் அரசு மருத்துவமனையில் எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல தனியாரிலும் பார்த்தேன். தனியாரில் பார்த்ததற்கான பில்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோரிய இழப்பீடு அதிகம் என்றும் அது எனக்கு கிடைக்க கூடியதில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**.